ந.க.எண் ந13/28/2024

நாள்: 31.01.2025

# வேலைவாய்ப்பு விளம்பரம்

தென்காசி மாவட்டத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் (சத்துணவு பிரிவு) அலுவலகத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தகவல் தொகுப்பாளர் மற்றும் கணினி அனுபவத்துடன் கூடிய உதவியாளர் ஆகிய 2 பணியிடங்களுக்கு கீழ்க்காணும் தகுதியுள்ள நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

1. தகவல் தொகுப்பாளர் , கணினி அனுபவத்துடன் கூடிய உதவியாளர் பணியிடத்திற்கு மாதம் ரூ.15000/- மட்டுமே தொகுப்பூதியம் வழங்கப்படும்.
2. இப்பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமானது ஆகும்.
3. இப்பணியிடம் 11 மாத காலத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.
4. பணி நியமனம் செய்பவருக்குரிய அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகும். அவரே தகுதியான ஆட்களை உரிய முறையில் (எழுத்து தேர்வு / நேர்முகத்தேர்வு) தேர்வு செய்வார்.
5. வட்டார அலுவலகங்களில் உடன் பணி புரியும் வகையில் இப்பணியிடங்கள் நிரப்பப்படும்.
6. பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களிடமிருந்து ரூ.200/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப் பணி பத்திரம் பெறப்படும்.
7. பணியமர்த்தப்படும் பணியாளர் வேலை திருப்திகரமாக இருப்பின் இப்பணியிடத்திற்கு உரிய பணி தொடராணை பெறப்பட்டு, பணிக்கால நீட்டிப்பு வழங்கப்படும். ஒவ்வொரு 11 மாத காலம் முடிவிற்குப் பின் இடைவெளி விட்டு பணியிடம் புதுப்பிக்கப்படும்.
8. **இப்பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது. எவ்விதமான முன்னுரிமையோ அல்லது பணி நிரந்தரம் செய்ய கோரவோ இயலாது.**
9. இப்பணியிடம் அரசு அனுமதிக்கும் காலம் மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் காலம் வரை மட்டுமே அனுமதிக்கப்படும்.
10. தமிழ்நாடு அரசு அலுவலரின் விதிமுறைகள் பொருந்தாது.

## கல்வித் தகுதிகள்

1. அரசு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் ஒரு பட்டம் (10 + 2 + 3) பெற்றிருக்க வேண்டும்.
2. கணினியில் M.S. office அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
3. குறைந்த பட்சம் கீழ்நிலை தட்டச்சில் ஆங்கிலம் மற்றும் தமிழ் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

## வயதுவரம்பு

1. விண்ணப்பதாரர்கள் 01.01.2025 அன்று 21 வயது பூர்த்தியடைந்தவர்களாகவும், 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் http://tenkasi.nic.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள் அஞ்சல் வாயிலாக மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 15.02.2025, மாலை - 5 மணி

**விண்ணப்பம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
(சத்துணவு பிரிவு) அலுவலகம்,
தென்காசி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம்,
தென்காசி - 627 811.

ஒம்/-ஏ.கே. கமல் கிஷோர்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தென்காசி மாவட்டம்.

/உ.ந.உ.அ/

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (சத்துணவு)
தென்காசி.

31.01.2025

| | |
|---|---|
| **<u>தென்காசி மாவட்டம்</u>**<br>**<u>புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்</u>**<br>மாவட்ட ஆட்சித் தலைவர் (சத்துணவு பிரிவு)<br><br><u>தகவல் தொகுப்பாளர் மற்றும் கணினி அனுபவத்துடன்</u> கூடிய உதவியாளர் பணியிடம் | கடவுச்சீட்டு அளவு நிழற்படம் |

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர்<br>தமிழில்<br>ஆங்கிலத்தில் | :<br>: | |
| 2. | வசிப்பிட முகவரி | | <u>கைபேசி எண்.</u> |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4. | பாலினம் | : | |
| 5. | தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | |
| 6. | கல்வித் தகுதி * | | |
| 7. | தொழில்நுட்பக் கல்வித் தகுதி *<br>தமிழ் தட்டச்சு<br>ஆங்கிலம் தட்டச்சு | : | |
| 8. | கணினி கல்வித் தகுதி * | : | |
| 9. | முன் அனுபவம் ஏதேனும் இருப்பின் அதன் விபரம் | : | |
| 10 | வசிப்பிடத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக தூரம் (கி.மீ) | : | |

(* வயது , கல்வித்தகுதி , தொழில்நுட்ப கல்வித்தகுதி , கணினி கல்வித்தகுதி ஆகியவற்றிற்கான சான்றொப்பம் இடப்பட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும்)

நாள் :

இடம் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்.